பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

06 11 2024 **WEDNESDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. டொனால்டு ட்ரம்பிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
2. இளையோரின் நலனை கருத்தில் கொண்டு பிரதமரின் வித்யாலக்ஷ்மி திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
3. அரசியல் சாசனம் என்பது வெறும் புத்தகமல்ல, வாழ்வின் தத்துவம் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.
4. தமிழகத்தில் டெங்கு பாதிப்பு குறைந்துள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
5. தெலங்கானா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Aditi Bhatt** உட்பட எட்டு பேர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>><<<<<**

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றிபெற்ற திரு. டொனால்டு ட்ரம்பிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் தமது வாழ்த்தினை பதிவு செய்துள்ள பிரதமர், அமெரிக்காவுடனான உறவை மேலும் வலுப்படுத்துவதற்காக அவருடன் இணைந்து பணியாற்றுவதில் ஆர்வமுடன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலக அமைதி, வளம் மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஒருங்கிணைந்து பணியாற்றுவோம் என்றும் திரு. நரேந்திர மோடி அதில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. டொனால்டு ட்ரம்ப், ஜனநாயக கட்சி வேட்பாளரான திருமதி. கமலா ஹாரிஸை விட அதிக பிரதிநிதித்துவ வாக்குகளை பெற்றார்.

**>>>>><<<<<**

இளையோர் நலன் மற்றும் விவசாயிகள் நலனுக்காக மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள இரண்டு திட்டங்கள், உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், இளையோர் திறனை மேம்படுத்துவதற்கும் உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தலைசிறந்த நிறுவனங்களில் உயர்கல்வி பயில, உத்தரவாதமின்றி எளிய முறையில் கடன் வழங்கும் பிரதமரின் வித்யாலக்ஷ்மி திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேபோல், இந்திய உணவுக் கழகத்திற்கு மூலதன முதலீடாக ஆயிரத்து 700 கோடி ரூபாயை வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவும், அமைச்சரவை முடிவுகளுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில் இந்த இரண்டு திட்டங்களுக்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதானும், மத்திய அமைச்சரவையின் முடிவினை வரவேற்றுள்ளார்.

கல்வியில் சிறந்து விளங்குபவர்கள் உயர்கல்வியை தொடர்வதற்கு நிதி தடையாக இருக்கக்கூடாது என்ற நோக்கில் பிரதமரின் வித்யாலக்ஷ்மி திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் உயர்கல்வி பயில்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மக்களவை தேர்தலின்போது பிரதமர் அளித்த உத்தரவாதத்தின் ஒரு அம்சமாக இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.
இந்திய உணவுக் கழகத்திற்கு மூலதன முதலீடாக ஆயிரத்து 700 கோடி ரூபாயை வழங்க, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கும், வேளாண் வளர்ச்சிக்கும் உதவிடும் என்று மத்திய உணவு அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.
இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் உணவுப் பாதுகாப்பு தூணாக இந்திய உணவுக் கழகம் திகழ்கிறது என்று தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் வழங்கும் மூன்றாம் கட்ட தேசிய அளவிலான இயக்கம் இன்று புதுதில்லியில் தொடங்கியது.

பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் இதனை தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

அரசியல் சாசனம் என்பது வெறும் புத்தகமல்ல, வாழ்க்கையின் தத்துவம் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

இன்று நாக்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அரசியல் சாசனத்தை உருவாக்குவதற்காக பாரதரத்னா அம்பேத்கரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று குறிப்பிட்டார்.

அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் அரசியல் சாசனத்தை அம்பேத்கர் உருவாக்கியதாகவும் திரு. ராகுல் காந்தி தெரிவித்தார்.

>>>>><<<<<

தெலங்கானாவில் சாதிவாரி கணக்கெடுப்பு இன்று தொடங்கியது.

சமூக – பொருளாதார – கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான கேள்விகள் இந்த ஆய்வில் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேற்பார்வையாளர்களும், 85 ஆயிரம் களப்பணியாளர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

இம்மாத இறுதிவரை இப்பணி மேற்கொள்ளப்படும் என்று தெலங்கானா அரசு கூறியுள்ளது.

இதன்பின்னர், இதுதொடர்பான அறிக்கை 3 வார காலத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

கர்நாடக முதலமைச்சர் திரு. சித்தராமையா, மைசூர் நகர வளர்ச்சி ஆணைய முறைகேடு வழக்கு தொடர்பாக இன்று மைசூரில் லோக் ஆயுக்தா முன்பு ஆஜரானார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து கேள்விகளுக்கும் தாம் பதிலளித்துள்ளதாக கூறினார்.

சுமார் 2 மணி நேரம் இந்த விசாரணை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

உத்தரபிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 6 பெண்கள், 3 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

**Hardoi** மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது லாரி மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலா இரண்டு லட்சம் ரூபாய் நிதியுதவியும் அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத்தும், இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ராஜஸ்தானில் இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக துணை முதலமைச்சர் திருமதி. தியா குமாரி கூறியுள்ளார்.

ராம்கரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தொழில் முதலீட்டாளர்களுடன் 15 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதன்மூலம், வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

தொழில் முனைவோர்களை உருவாக்குவதற்கும் ராஜஸ்தான் அரசு ஊக்கமளித்து வருவதாக திருமதி. தியா குமார் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் டெங்கு பாதிப்பு குறைந்துள்ளதாக மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் இன்று ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மருத்துவத் துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் தொடர்ந்து பூர்த்தி செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தோல் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மத்திய தோல் பொருள் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் ஸ்ரீராம் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் இதுதொடர்பாக நடைபெற்ற மாநாட்டிற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட் - ஸ்ரீராம் 40 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

உத்ராகண்டில் நீர் விநியோகம், துப்புரவுப் பணி மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு 20 கோடி அமெரிக்க டாலரை ஆசிய வளர்ச்சி வங்கியிடம் கடன் பெற வகை செய்யும் ஒப்பந்தத்திற்கு மத்திய அரசு கையெழுத்திட்டுள்ளது.

நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகளை செயல்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் உதவிகரமாக இருக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**>>>>><<<<<**

தெலங்கானா சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Aditi Bhatt, Mansi Singh, Shriyanshi Valishetty, Shreya Lele, Farza Nazrin, Isharani Baruah, Medhavi Nagar, Tanvi Sharma** ஆகியோர் மகளிர் ஒற்றையர் பிரிவுகளில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**>>>>><<<<<**

**Moselle Open** டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Rithvik Chaudhary Bollipalli –** போர்ச்சுக்கலின் **Francisco Cabral** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பிரான்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 6-4 என்ற செட்கணக்கில் மெக்ஸிக்கோவின் **Santiago Gonzalez –** பிரான்ஸின் **Roger Vasselin** இணையை வென்றது.

**>>>>><<<<<**

உலக **Taekwondo** போட்டியின் சீனியர் பிரிவில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Ashok Kumar Lenka** மற்றும் **Sabitri Pradhan** இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

**>>>>><<<<<**

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Koneru Humpy** ஆறாவது இடத்தில் உள்ளார்.

**>>>>><<<<<**

அஸ்ஸாம் அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 299 ரன் எடுத்துள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில், முகமது அலி 27 ரன்னுடனும், சோனி யாதவ் 12 ரன்னுடனும் களத்தில் உள்ளனர்.

**>>>>>END<<<<<**